## ஐந்தாவது

# இடப் பெயர்த் தொகுதி

மோக்கத்தின் பெயர் என்னும் தலைப்பில் முதற்பதிப்பாசிரியர் இயற்றி இத்தொகுதியின் முதலில் அமைத்த நூற்பா வருமாறு :

46. *அமுதங் கேவல மபவருக்கம் வீடு
சிவங்கை வல்லியஞ் சித்திமீ ளாக்கதி
பரகதி யோடு முத்தி பஞ்சமகதி
நிர்வாண மோக்க மெனநிகழ்த் தினரே.

### 845. தெய்வலோகத்தின் பெயர்

தானம், துறக்கம், பொன்னுலகு, உம்பர்,
வானகம், அமருலகு, உயர்நிலை, புத்தேள்,
(வியன்) உலகு, விசும்பு, விண்ணுலகு, நாகம்,
பவனம்,(மா) சுவர்க்கம், தெய்வலோகப் பெயரே.

**தெய்வலோகப் பெயர் (13)**

1. தானம், 2. துறக்கம், 3. பொன்னுலகு, 4. உம்பர், 5. வானகம், 6. அமருலகு, 7. உயர்நிலை, 8. புத்தேள்உலகு 9. விசும்பு, 10. விண்ணுலகு, 11. நாகம், 12. பவனம், 13. சுவர்க்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:1 வானம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த ஒரு புது நூற்பா வருமாறு:

நாகலோகத்தின் பெயர்

47. * பவன நாக லோகப் பாலதாம்
பவன நாக லோகம் பாதலம்-என்பது பிற்பதிப்புக்கள், (1)

### 846. விஞ்சையருலகத்தின் பெயர்

சேணியும், சேடியும், விஞ்சையர் சேர்விடம்.

**விஞ்சையருலகத்தின் பெயர் (2)**

1. சேணி, 2, சேடி. (2)

## 847. திசையின் பெயர்

மாதிரம், ஆசை, வம்பல், இசைப்பெயர்.

**திசையின் பெயர் (3)**

1. மாதிரம்: 2. ஆசை, 3. வம்பல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனோடு,

'விசும்பு முலகு மதற்கா கும்மே'
என ஓர் அடி இணைந்தும் சில பிரதிகள்.

விசும்பு முலகுங் கோவுங் காட்டையும்
அதன்பெய ராகு மென்மனார் புலவர்.

என்றும் சில பிரதிகள்.

இதனை அடுத்துத் தனி ஒரு நூற்பாவாக, மற்றுந்திசையின் பெயர் என்னும் தலைப்பில்
'ககுப மிசைபுலந் தேந்திக் கரிதம்
விசும்பு முலகுங்கோக் காட்டையுமாம்' என்று உள்ளது.

இதன் இரண்டாமடியை 'விசும்புல கங்கோக் காட்டையு மாகும்' என்னும் பாடவேறுபாட்டுடன் 'மாதிரமாசை' என்பு தனோடு இணைய மூன்றடியாகக் கொள்வர் பேராசிரியர் மு. இராகவையங்கார்.

பின்வரும் பாடவேறுபாடுகளுடனும் இந்நூற்பா காணப் பெறுகிறது:

மாதிர மாசை வாம்பல் விசும்பு
உலகுங் கோவுங் காட்டையு மாகும். (3)

## 848. கீழ்த்திசையின் பெயர்

குணக்கே, பூருவம், இந்திரி, பிராசி
கிழக்கு, கீழ்த்திசை கிளக்குங் காலே.

**கீழ்த்திசையின் பெயர் (5)**

1. குணக்கு, 2. பூருவம், 3. இந்திரி, 4. பிராசி, 5. கிழக்கு.



பாடவேறுபாடு—விளக்கம்

1:3 ஐந்திரி
2:1 கிழக்கே, கிழக்கும். (4)

## 849. தெற்கின் பெயர்

அவாசி, தக்கிணம், யாமியம், தெக்கு
சிவேதை மற்றுஇவை தெற்குஎனல் ஆகும்.

**தெற்கின் பெயர் (5)**

1. அவாசி, 2. தக்கிணம், 3. யாமியம், 4. தெக்கு, 5. சிவேதை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தென்றிசையின் பெயர்
1:2 தெக்கிணம்
2:1 சிவதை, 4. ஆமே. (5)

## 850. மேற்கின் பெயர்

மேக்கு, பச்சிமம், குடக்குஇவை மேற்கே
வாருணியம், பிரத்தியக்கும் அதுவே.

**மேற்கின் பெயர் (5)**

1. மேக்கு, 2. பச்சிமம், 3. குடக்கு, 4. வாருணியம், 5. பிரத்தியக்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மேற்றிசையின் பெயர்

2:1 வாருணம், வாருணீயம், வாருணி.

2:3 பிராத்தித் திக்கு

இரண்டாம் அடியை மற்றும் மேற்கின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப்பிரதி கொண்டுள்ளது. (6)

## 851. வடக்கின் பெயர்

உதக்கே, உதீசி, உத்தரம் என்ன
வடக்கின் பெயர் இவை வைக்குங் காலே.

வடக்கின் பெயர் (3)

1. உதக்கு, 2. உதீசி, 3. உத்தரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வடதிசையின் பெயர்.
உதக்கே யுதீசி யுத்தரம் வடக்கே. (7)

## 852. பூமியின் பெயர்

அவனி, காசினி, மேதினி, அளக்கர்,
தரணி, தாரணி, தராதலம், குவலயம்,
புடவி, பூதலம், தரை, படி, ஞாலம்,
வையம், அகிலம், கு, மண், புவி, பார், நடு
உலகு, புவனி, பரி, யுகம், நேமி
அகலிடம், பொறையாள், மண்டிலம், பூ, திணை,
தலம், பொழில், பிருதுவி, வேலாவலயம், தாலம்
நிலம், சகம், பூமி என நிகழ்த் தினரே.

பூமியின் பெயர் (37)

1. அவனி, 2. காசினி, 3. மேதினி, 4. அளக்கர், 5. தரணி, 6. தாரணி, 7. தராதலம், 8. குவலயம், 9. புடவி, 10. பூதலம், 11. தரை, 12. படி, 13. ஞாலம், 14. வையம், 15. அகிலம், 16. கு, 17. மண், 18. புவி, 19. பார், 20 நடு, 21. உலகு, 22. புவனி, 23. பரி, 24. யுகம், 25. நேமி, 26. அகலிடம், 27. பொறையாள், 28. மண்டிலம், 29. பூ, 30. திணை, 31. தலம், 32. பொழில், 33. பிருதுவி, 34. வேலாவலயம், 35. தாலம். 36. நிலம், 37, சகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:4 குவலையம்

3:4 தாலம்

4:1-2 வையகம் உலகம் 4 பார் நாடு

5:3 பாரியுகம், பாரிடயுக 3-4 அசலை உக நேமி

6:2 பொறையரண், 4. பூதிணை

7:3-4 பிருதுவிவே லாவலயம், வேலாவலையம்

7 பிருதுவி தலமகி குக்கோப் பொழிலே வேலாவலையம்

8 நிலஞ்ச கந் தாலம் பூமி யென்ப

நிலஞ்சகந் தாலம் பூமியென நிகழ்த்தினர். (8)



## 853. நரகின் பெயர்

நிரயம், துக்கம், பாதாளம், கும்பி,
அள்ளல், அளறே, அருஞ்சிறை, இருணிலம்,
எரியும், திமிரமும், இரவுரவம் என்று இவை
நரகின் பெயர் என நவின்றனர் புலவர்.

நரகின் பெயர் (11)

1. நிரயம், 2. துக்கம், 3. பாதாளம், 4. கும்பி, 5. அள்ளல், 6. அளறு, 7. அருஞ்சிறை, 8. இருணிலம், 9. எரி, 10. திமிரம், 11, இரவுரவம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நரகத்தின் பெயர்.

1:1—1 நிரையம் 2. நிகாதம், நிகேதம், நிகோதம்,

துருக்கம், துற்கம்.

3ஆம் அடியாக,

'பாவ மபரஞ் சந்தி யதோகதி'

என ஓர் அடி சில பிரதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

3:2—3 திகிரியு மிரௌரவமும், 3. மாவிரம்.

4:3—4 நவிலப் படுமே.

நிரையமும் பவர்க்கமுங் கும்பியும் புலவு
மூழலு நாரகமு மளறு மிருளுந்
துவாந்தமுந் திமிரமு நரகெனச் சொல்லுவர்

என்று ஒரு சில பிரதிகளில் பாடம். (9)

## 854. உலகின் பொதுப் பெயர்

புவனம், நாடு, பொழில், தலம், புடவி,
பவனம், உலகின் பொதுப்பெயர்ப் பால.

உலகின் பொதுப் பெயர் (6)

1. புவனம், 2. நாடு, 3. பொழில், 4, தலம், 5. புடவி, 6. பவனம். (10)

### 855. நாட்டின் பெயர்

பைதிரம், மண்டிலம், பாண்டில், தேயம்,
தண்ணடை, சனபதம், அகலுள், சும்மை,
கண்டம், ஏணி, உலகு என்றுஇவை நாடே.

**நாட்டின் பெயர் (11)**

1. பைதிரம், 2. மண்டிலம், 3. பாண்டில், 4. தேயம், 5. தண்ணடை, 6. சனபதம், 7. அகலுள், 8. சும்மை, 9. கண்டம், 10. ஏணி, 11. உலகு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3—4 பாண்டிலந் தேயம்.
2:3—4 பெயர்ப் பொதுப் பால. (11)

### 856. மலையின் பெயர்

விலங்கல், அடுக்கல், வெற்பு, பருப்பதம்;
சிலம்பு, நாகம், குறும்பொறை, சிகரம்,
வேதண்டம், வேரம், ஓதி, கிரி, சையம்,
தரணி, பூதரம், ஓங்கல், பிறங்கல்,
குவடு, குன்று, பறம்பு, வரை, விண்டு,
போதி, கோ, சிலை, இறும்பு, தடம், மாதிரம்,
பொச்சை, நவிர், கல்லகம், பொருப்பு, நகம். அசலம்,
சாரல், சிலோச்சயம், சயிலம், மலை என்ப.

**மலையின் பெயர் (37)**

1. விலங்கல், 2. அடுக்கல், 3. வெற்பு, 4. பருப்பதம், 5. சிலம்பு, 6. நாகம், 7. குறும்பொறை, 8. சிகரம், 9. வேதண்டம், 10. வேரம், 11. ஓதி, 12. கிரி, 13. சையம், 14. தரணி, 15. பூதரம், 16. ஓங்கல், 17. பிறங்கல், 18. குவடு, 19. குன்று, 20. பறம்பு, 21. வரை, 22. விண்டு, 23. போதி, 24. கோ, 25. சிலை, 26. இறும்பு, 27. தடம், 28. மாதிரம், 29. பொச்சை, 30. நவிர், 31. கல்லகம், 32. பொருப்பு, 33. நகம், 34. அசலம், 35. சாரல், 36. சிலோச்சயம், 37. சயிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3:2—4 வீரங் கிரிதிகிரி சையம்,
5:2 குன்றோதி
7 பொச்சைகல் கல்லகம் பொருப்புநக மசலம்,
8:3 சைலமலை,



8-ன் பின், திகிரி யோதிமம் பதலையு மென்ப,
என ஓர் அடி அதிகமாகச் சில பிரதிகள்.

7-ஆம் அடிக்குப்பின் பின்வருமாறு 4 அடிகள் ஒருசில பிரதிகளில் உள :

கற்றாரணி யுலமே சார லதனொடு
பருப்பத நகம் பதலை சிகரி
தராதர மத்திரி கோத்திரி குத்தரஞ்
சிலோச்சயஞ் சயில மலையெனக் கூறுவர் (12)

### 857. மேருவின் பெயர்

பொன்மலை, மேரு,

**மேருவின் பெயர் (1)**

பொன்மலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மேருமலையின் பெயர்.

பிற்பதிப்புக்களில் காணும் பாடம் வருமாறு :

மேருமலையின் பெயர் :

ஏம கூடம் பரிசன்னியம் பூதரம்.
மணிமலை பொன்மலை மகமேரு என்ப.

மேருவின் பெயரை அடுத்து முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

வெள்ளிமலையின் பெயர் :

48. *வெண்மலை வேதண்டம் விசயார்த்தம் வெள்ளிமலை,
பிற்பதிப்புக்கள் இதனோடு,

'கயிலையும் வெள்ளி மலையெனப்படுமே'

என மற்றோரடியும் சேர்த்து இரண்டடி நூற்பாவாகத் தந்துள்ளன. (13)

### 858. பொதிய மலையின் பெயர்

பொதியமலை, மலயம்.

**பொதிய மலையின் பெயர் (1)**

மலயம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 மலையம்,

மேருமலைக்கும் பொதிய மலைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 857, 858-ஆம் நூற்பாக்களை ஒரு நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

'தென்மலை மலையம் பொதிய மலையென்ப'
என்பது பிற்பதிப்புக்களில் காணும் பாடம். (14)

## 859. கொல்லிமலையின் பெயர்

வல்லியம் பொருப்பே, கொல்லி ஆகும்.

**கொல்லிமலையின் பெயர்**

வல்லியம் பொருப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 கொல்லிமலை. (15)

## 860. குன்றின் பெயர்

இறும்பு, பொச்சை, குவடு, பதலை,
பிறங்கல், பொற்றை, குறும்பொறை, குன்றே.

**குன்றின் பெயர் (7)**

1. இறும்பு, 2. பொச்சை, 3. குவடு, 4. பதலை, 5. பிறங்கல், 6. பொற்றை, 7. குறும்பொறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சிறுமலையின் பெயர்.
2 கச்சை (16)

## 861. மலையுச்சியின் பெயர்

கோடு, கொடுமுடி, குவடு, சிகரம்,
ஆகிய நான்கும் மலையின் உச்சி.

**மலையுச்சியின் பெயர் (4)**

1. கோடு, 2. கொடுமுடி, 3. குவடு, 4 சிகரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மலையினுச்சியின் பெயர்.
2:1-1 ஆகு நான்கு, ஆகுமிந் நான்கு,
2 சிமைய மைந்து மலையி னுச்சி—அச்சுப்பிரதி (17)



## 862. மலைப்பக்கத்தின் பெயர்

வாரமும், கடமும், சாரலும், மலைப்பக்கம்.

**மலைப்பக்கத்தின் பெயர் (3)**

1. வாரம், 2. கடம், 3. சாரல்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. தடமும். (18)

## 863. பாறையின் பெயர்

அறையே, பாறை.

**பாறையின் பெயர் (1)**

அறை (19)

## 864. துறுகல்லியின் பெயர்

பொறையே, துறுகல்.

**துறுகல்லின் பெயர் (1)**

பொறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பாறைக்குந் துறுகல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 863, 864-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (20)

## 865. மலைமுழையின் பெயர்

முடுக்கர், கந்தரம், மலைமுழை என்ப.

**மலைமுழையின் பெயர் (21)**

1. முடுக்கர், 2. கந்தரம். (21)

## 866. கீழறையின் பெயர்

பிலமே, கீழறை,

**கீழறையின் பெயர் (1)**

1. பிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதன்பின் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா:

குகையின் பெயர்

49. * நிகுஞ்சங் குகையாம். (22)

## 867. கற்புழையின் பெயர்

கண்டறை, கற்புழை.

**கற்புழையின் பெயர் (1)**

1. கண்டறை,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கற்பாழியின் பெயர்

காண்டை கற்பாழி.

கீழறைக்கும் கற்புழைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 866, 868-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கருதுவர்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா:

மற்றுங் கற்புழையின் பெயர் :

50. * கற்பாழி காண்டையுங் கருதுவ ரதற்கே.

'கண்டறை கற்புழை யென்னவும் படுமே
கற்பாழி காண்டையுங் கருதுவ ரதற்கே'

எனப் பிறபதிப்புக்கள் 'கற்புழையின் பெயர்' என்னும் தலைப்பில் தந்துள்ளன. (23)

## 868. கல்லின் பெயர்

சிலையும், உலமும், கல் என மொழிப.

**கல்லின் பெயர் (2)**

1. சிலை. 2. உலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திரள் கல்லின் பெயர்

சிலையே கன்னே யுலமே கல்லாம்.

திரண்ட கல்லின் பெயர்:

சிலையே கல்லே யுலமே திரள்கல்,

சிலையே கல்லே-அச்சுப்பிரதி. (24)



## 869. கற்றிரளின் பெயர்

உலமே, கற்றிரள் ஆகலும், உரித்தே.

**கற்றிரளின் பெயர் (1)**

1. உலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திரள்கல்லின் பெயர்,

உலிங்கற் றிரளென வோதலு முரித்தே.

உலமே திரள்கல்-அச்சுப்பிரதி. (25)

## 870. நுழைவாயிலின் பெயர்

நுழையும், சுருங்கையும், நுழைவாயில் ஆகும்.

**நுழைவாயிலின் பெயர் (2)**

1. நுழை, 2. சுருங்கை.

பாடவேறுபாடு—விளக்கம்

நூழை சுருங்கையொடு நுழைவாச லாகும்.

3 நுழைவாய்தல் (26)

## 871. மலைப்பிளப்பின் பெயர்

விடர், மலைப் பிளப்புஎன விளம்பினர் புலவர்.

**மலைப்பிளப்பின் பெயர் (1)**

1. விடர்.

பாடவேறுபாடு—விளக்கம்

விடரே மலைப்பிளப் பெனவிளம் பினரே. (27)

## 872. வெடிப்பின் பெயர்

விடரும், கமரும், வெடிப்பின் பெயரே.

**வெடிப்பின் பெயர் (2)**

1. விடர், 2. கமர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 விடவின், விடைவின், விடப்பின், விட்பின்

3-4 விட்புமு மிடப்பே. (28)

### 873. திடரின் பெயர்

திட்டை, திடரே.

**திடரின் பெயர் (1)**

1. திட்டை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : திட்டையின் பெயர்

இதனை அடுத்து, 'பிட்டையும் பிடலும் மண்கட்டி யாகும்' என ஒரு நூற்பா ஒரு சில பிரதிகளில் உள்ளது. (29)

### 874. சிறுதிட்டையின் பெயர்

பதுக்கை, சிறுதட்டை.

**சிறுதிட்டையின் பெயர் (1)**

1. பதுக்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சிறுதிடரின் பெயர்

2 சிறுதிட்டே.

திடருக்கும் சிறுதிட்டைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 873, 874-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (30)

### 875. முரம்பின் பெயர்

பரலடுத்து உயர்நிலம், முரம்பு எனப் படுமே.

**முரம்பின் பெயர் (1)**

1. பரலடுத்து உயர் நிலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பரலடுத்து யர்நிலத்தின் பெயர்.

1. பாரடுத் (31)



### 876. மேட்டின் பெயர்

திட்டை, திடறு, சுவல், வல்லே, வன்பால்,
மெட்டு, (கருந்) திடர், படர், குப்பை, குவால், குவை,
ஒட்டிய பதினொன்றும் மேடு என உரைப்பர்.

**மேட்டின் பெயர் (11)**

1. திட்டை, 2. திடறு, 3. சுவல், 4. வல், 5. வன்பால், 6. மெட்டு, 7. திடர், 8. படர், 9. குப்பை, 10. குவால், 11. குவை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:1 மேக்குக்

2 மெட்டுக் கருந்திடர் படர் குப்பை குவாலென

மெட்டுத் திடர்படர் குப்பை குவால்குவை-அச்சுப்பிரதி. (32)

### 877. பாதாளப் பெயர்

அரம், பிலம், பாதலம், பாதாளப் பெயரே.

**பாதாளப் பெயர் (3)**

1. அரம், 2. பிலம், 3. பாதலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 பாதாலம்

அரம்பிலம் என்று ஒரு பெயராக அச்சுப்பிரதி. (33)

### 878. கடலின் பெயர்

அத்தி, பௌவம், அளக்கர், ஆர்கலி,
ஆழி, பெருநீர், அம்பரம், முந்நீர்,
உப்பு, வீரை, சக்கரம், சாசரம்,
வேலை, வெள்ளம், மகாலயம், நேமி,
சலநிதி, வாரி, சலதி, அலையே,
பாரா வாரம், உதத, சமுத்திரம்,
பரவை, உவாவே, நரலை, புணரி,
வேலா வலயம், கார்கோள், ஓதம்,
வாருணம், சிந்து, வாரம், அம்பு ராசி,
(கார்மலி) உவரி, கடல் எனக் கருதுவர்.

**கடலின் பெயர் (35)**

1. அத்தி, 2. பௌவம், 3. அளக்கர், 4. ஆர்கலி, 5. ஆழி, 6. பெருநீர், 7. அம்பரம், 8. முந்நீர், 9. உப்பு, 10. வீரை, 11. சக்கரம், 12. சாகரம், 13. வேலை, 14. வெள்ளம், 15 மகராலயம், 16. நேமி, 17 சலநிதி, 18. வாரி, 19. சலதி, 20. அலை, 21. பாராவாரம், 22. உததி, 23. சமுத்திரம், 24. பரவை, 25. உவா, 26. நரலை, 27. புணரி, 28. வேலாவலயம் 29. கார்கோள், 30. ஓதம், 31. வாருணம், 32. சிந்து, 33. வாரம், 34. அம்புராசி, 35. உவரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சமுத்திரத்தின் பெயர்.

1:2 பவ்வம்

2-4 முன்னீர்

6:3 நதிபதி

7: பரவையு வர் நரலை புணரி வாரிதி

10: கார்மலை யுவரி கடலெனச் செப்புவர். (34)

## 879. கடற்றிரையின் பெயர்

ஓதமும், புணரியும், கடற்றிரை ஆகும்.

**கடற்றிரையின் பெயர் (2)**

1. ஓதம், 2. புணரி. (35)

## 880. புனற்றிரைப் பொதுப் பெயர்

விசிகரம், தரங்கம், அறல், கல் லோலம்,
அலை, புனற் றிரைக்கு வரும் பொதுப் பெயரே,

**புனற்றிரைப் பொதுப் பெயர் (5)**

1. விசிகரம், 2. தரங்கம், 3. அறல், 4. கல்லோலம், 5. அலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நீர்த்திரையின் பொதுப் பெயர்.

1:1 சீகரம்

2:2-4 திரைக்குப் பொதுப் பெயராகும், (36)



## 881. கடற்கரையின் பெயர்

வேலையும், பாரா வாரமும், கடற்கரை.

**கடற்கரையின் பெயர் (2)**

1. வேலை, 2. பாராவாரம். (37)

## 882. கரையின் பொதுப்பெயர்

திரம், பாரம், வரை, அணை, கோடு,
கூலம், வார், புனலின் கரைக்குவரு பொதுப்பெயர்.

**கரையின் பொதுப் பெயர் (6)**

1. திரம், 2. பாரம், 3. வரை, 4. அணை, 5. கோடு. 6. கூலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நீர்க் கரையின் பொதுப்பெயர், புனற் கரைப் பொதுப் பெயர்.

2. கூலம் வாரம் புனற்கரைப் பொதுப்பெயர்-அச்சுப்பிரதி.

இதனை அடுத்து, 'மீனம் துரையின் பெயரா கும்மே' என நூற்பா ஒரு சில பிரதிகளில் உளது. (38)

## 883. செய்கரையின் பெயர்

குலையும், சேதுவும், குரம்பும், செய்கரை.

**செய்கரையின் பெயர் (3)**

1. குலை. 2. சேது, 3. குரம்பு. (39)

## 884. மலையாற்றின் பெயர்

அருவி, மலைச்சாரல் வரும்யாறு ஆகும்.

**மலையாற்றின் பெயர் (1)**

1. அருவி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மலைச்சாரல் வரும் யாற்றின் பெயர், அருவியின் பெயர், அருவியென்னும் பெயர். (40)

### 885. கான்யாற்றின் பெயர்

கலுழியும், உயவையும், முல்லைநிலக் கான்யாறு.

**கான்யாற்றின் பெயர் (2)**

1. கலுழி, 2. உயவை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முல்லைக் கான்யாற்றின் பெயர்

3-4 முல்லைக் கான்யாறு. (41)

### 886. ஆற்றின் பெயர்

உந்தி, நதி, துறை, வருபுனல், குடிஞை,
சிந்துவோடு, ஒலியல், ஆறெனச் செப்புவர்.

**ஆற்றின் பெயர் (7)**

1. உந்தி, 2. நதி, 3. துறை, 4. வருபுனல், 5. குடிஞை, 6. சிந்து, 7. ஒலியல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஆற்றின் பொதுப்பெயர், யாற்றின் பொதுப் பெயர் 1:3 வரும்புனல் (42)

### 887. கழியின் பெயர்

காயலும், முகமும், கழி எனப்படுமே.

**கழியின் பெயர் (2)**

1. காயல், 2. முகம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 கழியெனக் கருதுவர்.

கானன் முரம்பு காயன் முகங்கழி-அச்சுப்பிரதி. (43)

### 888. கழிமுகத்தின் பெயர்

அதோமுகம், புகாரோடு, அருவி, கூடல்
கழிமுகம் என்று கருதல் வேண்டும்.

**கழிமுகத்தின் பெயர் (4)**

1. அதோமுகம், 2. புகார், 3. அருவி, 4. கூடல்,



**பாடவேறுபாடு—விளக்கம்**

1:3-4 டழிவில் கூடல், டழிவு கழிமுகம்.

1 ஆதோ முகம் புகார்கூட லழுவி கழிமுகம்.

2:3-4 கருதப் படுமே. (44)

### 889. உப்பளத்தின் பெயர்

காயல் உப்பளம் ஆகக் கருதுவர்.

**உப்பளத்தின் பெயர் (1)**

1. காயல்

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 கானல்

உப்பளங் காய லுவளக மளக்கர்-அச்சுப்பிரதி. (45)

### 890. காவிரியின் பெயர்

பொன்னி, காவேரி.

**காவிரியின் பெயர் (1)**

1. பொன்னி

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. காவேரி (46)

### 891. பொருநையின் பெயர்

பொருநை, (தண்) பொருந்தம்.

**பொருநையின் பெயர் (1)**

1. பொருந்தம், தண்பொருந்தம் என்றும் கொள்வர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

காவேரிக்கும் பொருநைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 890, 891-ஆம் நூற்பாக்களை ஒரு நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (47)

### 892. குமரியின் பெயர்

குமரி கன்னி ஆம்எனக் கூறுவர்.

குமரியின் பெயர் (1)

1. கன்னி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கன்னிமாகுமரியின் பெயர்

3. யாகக்

'கன்னி குமரி' என்பது ஒரு பிரதியிற்கண்ட பாடம் (48)

## 893. வையையின் பெயர்

வேக வதியே, வையை ஆகும்.

வையையின் பெயர் (1)

வேகவதி

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 வைகையா ராகும், வைகையென விளம்புவர். (49)

## 894. ஆன் பொருந்தத்தின் பெயர்

ஆனி, வானி, ஆன்பொருந் தம்மே.

ஆன் பொருந்தத்தின் பெயர் (2)

1. ஆனி, 2. வானி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆன்பொருந்த நதியின் பெயர், ஆன் பொருனையின் பெயர்.

3-4 ஆன் பொருந்தமாகும்.

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த மூன்று புதுநூற்பாக்கள் வருமாறு:

கௌதமை நதியின் பெயர்

51. *கோதை கௌதமை யாகக்]கொள்வர்.

கோதாவிரியின் பெயர்

52. *விருத்த கங்கை விமலை கோதாவரி.

பால்யாற்றின் பெயர்

53. *பாலி கீரநதி பால்யா றாகும். (50)



## 895. வாவியின் பெயர்

அலந்தை, பண்ணை, கோட்டகம், கிடங்கோடு,
இலஞ்சி, மலங்கல், சுனை, ஏல்லை, ஓடை,
வட்டம், தடாகம், மடு, குளம், வலயம்,
குட்டம், குண்டம், பட்டம், சூழி,
பொய்கை, கேணி, ஆவி, தடம், படுகர்,
ஏரி, கயம், அயம், உவளகம், வாவி.

வாவியின் பெயர் (27)

1. அலந்தை, 2. பண்ணை, 3. கோட்டகம், 4. கிடங்கு, 5. இலஞ்சி, 6. மலங்கல், 7. சுனை, 8. ஏல்லை, 9. ஓடை, 10. வட்டம், 11. தடாகம், 12. மடு, 13. குளம், 14. வலயம், 15. குட்டம், 16. குண்டம், 17. பட்டம், 18. சூழி, 19. பொய்கை 20. கேணி, 21. ஆவி, 22. தடம், 23. படுகர், 24. ஏரி, 25. கயம், 26. அயம், 27. உவளகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 கொட்டம்

2:2 தாங்கல்

6:2 கயம் பயம் 3-4 உவளக நளினி

7 வாவி யென்று வகுத்தனர் புலவர்.

இந்நூற்பாவை மூன்று பகுதியாகக் கொண்டு பின்வருமாறு ஒரு பிரதி பகுத்துக் காட்டியுள்ளது :

ஓடையின் பெயர்

அலந்தை பண்ணை...ஓடை. (முதல் இரண்டு அடிகள்.)

குளத்தின் பெயர்

வட்டந் தடாகம்....சூழி. (3-4-ஆம் அடிகள்)

வாவியின் பெயர்

பொய்கை கேணி....வாவி. (5-6-ஆம் அடிகள்,) (51)

## 896. எந்திரவாவியின் பெயர்

இலவந்திகையே, எந்திர வாவி.

எந்திரவாவியின் பெயர் (1)

1. இலவந்திகை. (52)

### 897. ஆற்றிடைக்குறையின் பெயர்

இலங்கையும் துருத்தியும் என இரு பெயரோடு
அரங்கமும் ஆற்றிடைக் குறை என அறைவர்.

**ஆற்றிடைக்குறையின் பெயர் (3)**

1. இலங்கை, 2. துருத்தி, 3. அரங்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:3 எனவரும்

இலங்கை துருத்தி யாற்றிடைக்குறை-என ஒரு பிரதி. (53)

### 898. ஊருணியின் பெயர்

ஊர்உணும் பொதுநீர், ஊருணி ஆகும்.

**ஊருணியின் பெயர்**

ஊர் உணும் பொதுநீர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஊருணுநீர்ப் பெயர், ஊருணியென்னும் பெயர். (54)

### 899. கிணற்றின் பெயர்

கூவலும், அசும்பும், துரவும், குழியும்,
பூவலும், கேணியும், கிணறுஎனப் புகல்வர்.

**கிணற்றின் பெயர் (6)**

1. கூவல், 2. அசும்பு, 3. துரவு, 4. குழி, 5. பூவல், 6. கேணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:3 கூபமுங்

2:3-4 துரவுங் கிணறே

இந்நூற்பாவை இருவேறு தலைப்புக்களில் ஒரு பிரதி அமைத்துத் தந்துள்ளது.

**கிணற்றின் பெயர் :**

கூவலு மசும்புங் கிணறெனக் கூறுவர்.

**துரவின் பெயர் :**

பூவலுங் கேணியுந் துரவெனப் புகல்வர். (55)



### 900. ஊறலின் பெயர்

அஃகும், உறவியும், அசும்பும், ஊறல்.

**ஊறலின் பெயர் (3)**

1. அஃகு, 2. உறவி, 3. அசும்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அஃகமு முறவியு மூற லாகும்.

அஃகு முறவி யூறலாகும் (56)

### 901. குமிழியின் பெயர்

புற்புதம், மொக்குள், பவ்வம், குமிழி.

**குமிழியின் பெயர் (3)**

1. புற்புதம், 2. மொக்குள், 3. பவ்வம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 பௌவநீர்க் குமிழி. (57)

### 902. நுரையின் பெயர்

நுரையே பேனம் ஆகும் என்ப.

**நுரையின் பெயர் (1)**

1. பேனம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 பீனம்

குமிழின் பெயர் என்னும் தலைப்பில்,

'நுரையே பீன மொக்குள் பௌவங்
குமிழ்புற் புதமே கொப்புழாகப் புகல்வர்'
என்று ஒரு பிரதி தந்துள்ளது. (58)

### 903. ஆழத்தின் பெயர்

அழுந்தும், குண்டும், கயமும், ஆழம்.

**ஆழத்தின் பெயர் (3)**

1. அழுந்து, 2. குண்டு. 3. கயம்,

பாடவேறுபாடு—விளக்கம்

1 அழுவமும் 3 அகாதமும் (59)

## 904. நிறைபுனலின் பெயர்

வழாறும், விராறும், வாரியும், நிறைபுனல்.

**நிறைபுனலின் பெயர் (3)**

1. வழாறு, 2. விராறு, 3. வாரி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பிராறும் (60)

## 905. நீந்துபுனலின் பெயர்

அகாதம் என்பது நீந்துபுனல் ஆகும்.

**நீந்துபுனலின் பெயர் (1)**

1. அகாதம்

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 நீந்தும் புனலே. (61)

## 906. நீரோட்டத்தின் பெயர்

கோலம் என்பது கொழுந்து நீரோட்டம்.

**நீரோட்டத்தின் பெயர் (1)**

1. கோலம்,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொழுந்து நீரோட்டத்தின் பெயர்.

3-4 கொடு நீரோட்டம். (62)

## 907. தெளிநீரின் பெயர்

சற்சலம் என்பது தெளிநீர் ஆகும்.

**தெளிநீரின் பெயர் (1)**

1. சற்சலம்.



பாடவேறுபாடு—விளக்கம்

1. சயசல, சசலம், சலசலம். (63)

## 908. கலங்கற்புனலின் பெயர்

விலங்கல், கலுழி, கலங்கற் புனலே.

**கலங்கற்புனலின் பெயர் (2)**

1. விலங்கல், 2. கலுழி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கலங்கல்நீரின் பெயர்.

விலங்க லென் பது கலங்கற் புனலே. (64)

## 909. குழைசேற்றின் பெயர்

அள்ளல், அசறோடு, அளக்கர், அளறு,
கொள்ளம், அளறு, குழம்பு, காலாழ்
தொள்ளி, பங்கம், பூழி, குழை சேறே.

**குழைசேற்றின் பெயர் (11)**

1. அள்ளல். 2. அசறு, 3. அளக்கர், 4. அளறு, 5. கொள்ளம், 6. அளறு, 7. குழம்பு, 8. காலாழ், 9. தொள்ளி, 10. பங்கம். 11. பூழி. குழை என்பதையும் சேற்றின் ஒரு பெயராகக் கொள்வதுண்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சேற்றின் பெயர்.

1:1—2 அள்ளல் குழையோடு

2:3-4 குழம்பு கா லாழும்

3:1 தெள்ளி 4. குழைசேறு. (65)

## 910. சேற்றின் பெயர்

தொய்யல், தொளியே, செதும்பு, சேதகம்,
செய்யல் என்று இவை சேறுஎனத் தகுமே.

**சேற்றின் பெயர் (5)**

1. தொய்யல், 2. தொளி, 3. செதும்பு, 4. சேதகம் 5. செய்யல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 தொய்யிறொள்ளி, 2. தொளியல், 3. சேது.

2:2-4 லெனுமிவை சேறெனப் படுமே.

குழைசேற்றுக்கும் சேற்றுக்கும் உள்ள பெயர்கள் (909, 910) சேறு என்பதன் பரியாயங்களாக ஓர் ஏடு கொண்டுள்ளது.

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. 1840-ஆம் ஆண்டுப் பதிப்பில் உடுக்குறி இடப்பட்டிருக்கிறது.

இதனை அடுத்து, வழுக்குநிலத்தின் பெயர் என்னும் தலைப்பில்,

'அருப்ப மசட மழுவம் வழுக்கு நிலமே'

என ஒரு நூற்பா உள்ளது. இதுவும் பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. (66)

## 911. பொல்லாநிலத்தின் பெயர்

அசும்பு, அசறு, அங்கணம், பொல்லா நிலமே.

**பொல்லாநிலத்தின் பெயர் (3)**

1. அசும்பு, 2. அசறு, 3. அங்கணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

'அசும்பு மயசு மசுபாசந் தன்னுட
னங்கணமுஞ் சகதியும் பொல்லா நிலமே' அச்சுப்பிரதி.

(67)

## 912. வெண்மணலின் பெயர்

வாலுகம், வெண்மணல்.

**வெண்மணலின் பெயர் (1)**

1. வாலுகம். (68)

## 913. மணற்குன்றின் பெயர்

புளினம், மணற்குன்றே.

**மணற்குன்றின் பெயர் (1)**

1. புளினம்.



பாடவேறுபாடு—விளக்கம்

வெண்மணலுக்கும் மணற்குன்றுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 912, 913-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (69)

## 914. நுண்மணலின் பெயர்

அதர், அயிர், நுண்மணல்.

**நுண்மணலின் பெயர் (2)**

1. அதர், 1. அயிர்.

பாடவேறுபாடு—விளக்கம்.

1 அதரயிரம்

அதரயிர் நுண்மணல் வரிமணலு மாகும்.

அசிறு மயிறு நுண்மணலாகும். (70)

## 915. புழுதியின் பெயர்

பொடி, பூழ்தி, புழுதி ஆகும் என்ப.

**புழுதியின் பெயர் (2)**

1. பொடி, 2. பூழ்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 யாமெனப் புகல்வர்

பொடியதிர் பூழி தூளிதுகள் புழுதி. (71)

## 916. கருமணலின் பெயர்

அறலே, (அலைநுண்) கருமணல் ஆகும்.

**கருமணலின் பெயர் (1)**

1. அறல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அலைகொழித்த கருநுண் மணலின் பெயர்.

நுண்மணலின் பெயர். (72)

### 917. குறிஞ்சிநிலப் பெயர்

மலைச்சார்பு, குறிஞ்சி நிலம்.

**குறிஞ்சிநிலப் பெயர் (1)**

1. மலைச்சார்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு ; குறிஞ்சியென்பது, குறிஞ்சியென்னும் பெயர்.

2. குறிஞ்சி. (73)

### 918. நெய்தல்நிலப் பெயர்

கடற்சார்பு, நெய்தல் நிலம்.

**நெய்தல்நிலப் பெயர் (1)**

1. கடற்சார்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நெய்தலென்பது, நெய்தலென்னும் பெயர்.

2. நெய்தல். (74)

### 919. முல்லைநிலப் பெயர்

காடுசார் நிலம், முல்லை.

**முல்லைநிலப் பெயர் (1)**

1. காடுசார் நிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முல்லையென்பது, முல்லையென்னும் பெயர்.

1. காடுசார், (75)

### 920. மருதநிலப் பெயர்

நாடுசார் நிலம், மருதம்.

**மருதநிலப் பெயர் (1)**

1. நாடுசார் நிலம்.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மருதமென்பது, மருதமென்னும் பெயர்.

1. நாடுசார். (76)

### 921. பாலைநிலப் பெயர்

நீர் இன்றி வேனில் தெறுநிலம், பாலை.

**பாலைநிலப் பெயர் (1)**

1. நீர் இன்றி வேனில் தெறுநிலம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பாலை யென்பது, பாலை யென்னும் பெயர்.

917-721 ஆக வரும் ஐந்து நூற்பாக்களையும் 'ஐந்து நில மாவன' என்னும் தலைப்பில் மூன்றடி நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

மலைச்சார்பு குறிஞ்சிநிலங் கடற்சார்பு நெய்தனிலங்
காடுசார் நிலமுல்லை நாடுசார் நிலமருத
நீரின்றி வேனிற் றெறுநிலம் பாலை.

பிற்பதிப்புக்கள் ஐந்திணையாவன என்னும் தலைப்பில்மேலே சுட்டியவாறு ஒரு நூற்பாவாகவே தருகின்றன. (77)

### 922. மருதநிலத்தின் விளைநிலப் பெயர்

அகணி, பணை, பண்ணை, பழனம், கழனி,
பானல், கம்பணை, படுகர், வயல், மருதம்.

**மருதநிலத்தின் விளைநிலப் பெயர் (9)**

1. அகணி, 2. பணை, 3. பண்ணை, 4. பழனம், 5. கழனி, 6. பானல், 7. கம்பணை, 8. படுகர், 9. வயல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மருதநிலத்தின் பெயர்:

2;2 கப்பணை. (78)

### 923. முல்லையின் விளைநிலப் பெயர்

புறவம், புறம்பணை, முல்லைநிலப் பெயரே.

முல்லையின் விளைநிலப் பெயர் (2)

1. புறவம், 2. புறம்பணை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முல்லைநிலத்தின் பெயர். (79)

### 924. குறிஞ்சியின் விளைநிலப் பெயர்

அறைவர் குறிஞ்சிக்கும் அப்பெயர் தானே.

குறிஞ்சியின் விளைநிலப் பெயர் (2)

1. புறவம், 2. புறம்பணை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குறிஞ்சி நிலத்தின் பெயர்.

முல்லை நிலத்தின் பெயர், குறிஞ்சிநிலத்தின் பெயர் என்னும் தலைப்பில் 923, 924-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (80)

### 925. வன்பால் என்னும் பெயர்

வன்பால், குறிஞ்சியும் பாலையும் ஆகும்.

வன்பால் என்னும் பெயர் (2)

1. குறிஞ்சி, 2. பாலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வன்னிலப் பெயர். (81)

### 926. மென்பால் என்னும் பெயர்

மென்பால் என்பது மருதம் மேற்றே.

மென்பால் என்னும் பெயர் (1)

1. மருதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மென்னிலப் பெயர். (82)



### 927. சமப்பால் என்னும் பெயர்

முல்லையும் நெய்தலும் மொழி சமப்பாலே.

சமப்பால் என்னும் பெயர் (2)

1. முல்லை, 2. நெய்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு ; சமநிலப் பெயர். (83)

### 928. கருநிலம் என்னும் பெயர்

மலையின் நீரில் வனத்தில் வந்த மற்று
எனைய மிகுதிச்சொல் கருநிலப் பெயரே.

கருநிலம் என்னும் பெயர்

மலையினும் நீரினும் வனத்தினும் வந்த மிகுதி நிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கருநிலப் பெயர்.

1:3 வனத்தினில்

2:1 நினைய 3-4 கருநிலத் தூர்ப்பெயர்.

2 நினைய பயன்படா மிகுதி கருநிலம்-பிற்பதிப்புக்கள். (84)

### 929. துருக்கத்தின் பெயர்

அழுவம், துருக்கம் ஆகும் என்ப.

துருக்கத்தின் பெயர் (1)

1. அழுவம். (85)

### 930. ஊரின் பெயர்

பாக்கம், பட்டினம், பதி, நகர், சும்மைம,
பூக்கம், சேரி, புரமே, பூண்டி,
அகரம், குடியே, குறிச்சி, கோசரம்,
அகலுள், நொச்சி, இருக்கை, வேலி,
குப்பம், பாடி, குறும்பு, பாழி,
சிறுகுடி, தண்ணடை, உறையுள், எயிலொடு
வாழ்க்கை உட்படுத்து இருபத் தாறும்
நாடும் ஊரென நவின்றனர் புலவர்.

**ஊரின் பெயர் (26)**

1. பாக்கம், 2. பட்டினம், 3. பதி, 4. நகர், 5. சும்மை, 6. பூக்கம், 7. சேரி, 8. புரம், 9. பூண்டி, 10. அகரம், 11. குடி, 12. குறிச்சி, 13. கோசரம், 14. அகலுள், 15. நொச்சி, 16. இருக்கை, 17. வேலி, 18. குப்பம், 19. பாடி, 20. குறும்பு, 21. பாழி, 22. சிறுகுடி, 23. தண்ணடை, 24. உறையுள், 25. எயில், 26. வாழ்க்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:3 புரமுட்டம், புரிபுரம்

4:4 வேரி

5. குப்பஞ் சிறுகுடி கவையிரும் பாழி

6 முட்டங் குறும்பே யுறையு ளெயிலொடு

7 பாடி யுட்படுத் திருபத் தாறும்
வாழ்க்கை யுட்படுத் திருபத் தேழும்

7:1 வாட்கை

8 நாடி லூரென்று நவின்றிசி னோரே

8:1-2 நாடு மூரென்று

இதன்பின் ஆறு நூற்பாக்கள் முதற்பதிப்பிலும் பிற்பதிப்புக்களிலும் காணப்படுகின்றன. அவை பழமையான பிரதிகளில் இல்லை. எனவே, அவற்றை நூலின் பகுதியாக அமைக்கவில்லை. அவை வருமாறு:

**நீரும் வயலும் சூழ்ந்த ஊரின் பெயர்**

சுரந்த நீரும் வயலுஞ் சூழ்ந்தவூர்

கிராம மாகக் கிளக்கப் படுமே.

**ஐஞ்ஞூறு குடி நிறைந்த ஊரின் பெயர்**

குடியைஞ் நூறுக்குக் குறைவற நிறைந்தது

பெருங் கிராம மென்று பேசப் படுமே.

கிராமம் என்னும் பெயர் ஊர்ப் பெயர்களுள் ஒன்றாகச் சுட்டப்படாமையும் நோக்கத் தக்கது. எனவே, இவை ஆசிரியர் வாக்கல்ல என்பது உறுதிப்படும்.

**மலை சூழ்ந்த ஊரின் பெயர்**

கிரிபல சூழ வடுத்த வூர் கேடகம்.

இது 'சூழ் கழியிருக்கை' என்னும் (937) நூற்பாவையடுத்துப் பாடவேறுபாடுடன் (938) பல பிரதிகளிலும் காணப்படுகிறது.



**மலையும் ஆறும் சூழ்ந்த ஊரின் பெயர்**

மலையு மாறு மடுத்தவூர் கர்வடம்,
மலையும் யாறு மடுத்தவூர் கருவடம்-என்றும் பாடம்.

**பலபண்டம் பகரும் கடற்கரையூரின் பெயர்**

பண்டம் பலகொடு பகருங் கடற்கரை
மன்னும் பதியே பட்டின மாகும்.

**சிற்றூரின் பெயர்.**

பட்டு நொச்சியும் பள்ளியுஞ் சிற்றூர். (86)

## 931. குறிஞ்சி நிலத்தூர்ப் பெயர்

குறிச்சி, *சீறூர்*, குறிஞ்சிநிலத்து ஊர்ப்பெயர்.

**குறிஞ்சி நிலத்தூர்ப் பெயர் (2)**

1. குறிச்சி, 2. *சீறூர்*. (87)

## 932. முல்லை நிலத்தூர்ப் பெயர்

பாடி, முல்லைப்பதி.

**முல்லை நிலத்தூர்ப் பெயர் (1)**

1. பாடி. (88)

## 933. நெய்தல் நிலத்தூர்ப் பெயர்

1. பட்டினம், நெய்தற் பதி.

**நெய்தல் நிலத்தூர்ப் பெயர் (1)**

பட்டினம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

முல்லை நிலத்தூர்க்கும் நெய்தனிலத்தூர்க்கும் பெயர் என்னும் தலைப்பில் 932, 933-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (89)

## 934. பாலைநிலத்தூர்ப் பெயர்

முனையிடம், குறும்பு, (முது) பாலை நிலத்தூர்.

**பாலைநிலத்தூர்ப் பெயர் (2)**

1. முனையிடம், 2. குறும்பு. (90)

## 935. மருதநிலத்தூர்ப் பெயர்

பூக்கம், குடிக்காடு, பூரியம், உறையுள்.
பாக்கம், அருப்பம், அகலுள், பதியே,
வாழ்க்கை, தண்ணடை, மருதநிலத்து ஊர்ப்பெயர்.

**மருதநிலத்தூர்ப் பெயர் (10)**

1. பூக்கம், 2. குடிக்காடு, 3. பூரியம், 4. உறையுள், 5. பாக்கம், 6. அருப்பம், 7. அகலுள், 8. பதி, 9. வாழ்க்கை, 10. தண்ணடை.

பாடவேறுபாடு—விளக்கம்

'பதியே' என்பதின் பின் மூன்றாம் அடியாக,
'கோட்டம் வசதி தாவள நியமம்' என்பது அச்சுப்பிரதி.

3:1 வாட்கை 3-4 மருதநிலத் தூரே. (91)

## 936. நகரப்பதியின் பெயர்

பாடியும், புரமும், நகரப்பதியே.

**நகரப்பதியின் பெயர் (2)**

1. பாடி, 2. புரம். (92)

## 937. சூழ்கழியிருக்கையின் பெயர்

சூழ்கழி இருக்கை, தோணாமுகமே.

**சூழ்கழியிருக்கையின் பெயர் (1)**

1. தோணாமுகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சூழூரின் பெயர், தோணாமுகம் என்னும் பெயர்.

3-4 சோணா முகமே. (93)

## 938. மலையாற்றடுத்த ஊர்ப்பெயர்

கிரியும், யாறும் அடுத்த ஊர், கேடகம்.



**மலையாற்றடுத்த ஊர்ப்பெயர் (1)**

1. கேடகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கேடகம் என்னும் பெயர்.

அச்சுப்பிரதியில் இந்நூற்பா இந்த இடத்தில் இல்லை. (94)

## 939. மடப்பம் என்னும் பெயர்

மருங்கில் ஊழ்சூழ் பெரும்பதி, மடப்பம்.

**மடப்பம் என்னும் பெயர்**

மருங்கில் ஊர்சூழ் பெரும்பகுதி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பெரும்பதியின் பெயர், மருங்கில் ஊர்சூழ் பெரும்பதியின் பெயர்.

4 படப்பம் (95)

## 940. குறும்பு என்னும் பெயர்

கொடுங் குறும்பர் அரணிருக்கை குறும்பு என்று ஆகும்.

**குறும்பு என்னும் பெயர் (2)**

1. கொடுங்குறும்பர், 2. அரணிருக்கை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குறும்பருப் பெயர்.

1-2 கொடுங்குறும் பரணிருக்கை. (96)

## 941. பாசறை என்னும் பெயர்

பாசறை முனைமேல் சென்றோர் உறைபதி.

**பாசறை என்னும் பெயர்**

முனைமேற் சென்றோர் உறைபதி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பாசறையின் பெயர்: முனைமேற் சென்றோ ருறைபதியின் பெயர். (97)

### 942. உறையூரின் பெயர்

கோழி, உறையூர்.

**உறையூரின் பெயர் (1)**

1. கோழி. (98)

### 943. மதுரையின் பெயர்

கூடல், மதுரை.

**மதுரையின் பெயர் (1)**

1. கூடல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

உறையூருக்கும் மதுரைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 942, 943-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதனை அடுத்துச் சில ஏடுகளில் பின்வரும் இரு நூற்பாக்கள் உள:

புரத்தின் பெயர்

புரியென் கிளவிபுரமென் றாகும்.

பாடியென்னும் பெயர்

பாடி யென்பது சேரியாகும்.

மதுரையின் பெயரை அடுத்து முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த இருநூற்பாக்கள் வருமாறு:

சிதம்பரத்தின் பெயர்

54. * மன்றஞ் சிதம்பரம்.

திருவாரூரின் பெயர்

55. * கமலை திருவாரூர். (99)

### 944. கருவூரின் பெயர்

கருவூர், வஞ்சி.

**கருவூரின் பெயர் (1)**

1. வஞ்சி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்துக் காஞ்சியின் பெயர்,

'கச்சி காஞ்சி.'
என ஒருசில பிரதிகளில் காணப்படுகிறது. (100)

### 945. காவிரிப்பூம் பட்டினத்தின் பெயர்

காகந்தி புகார், காவிரிப்பூம் பட்டினம்.

**காவிரிப் பூம்பட்டினத்தின் பெயர் (2)**

1. காகந்தி, 2. புகார்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கருவூருக்கும் காவிரிப்பூம் பட்டினத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 944, 945-ஆம் நூற்பாக்களை இணைத்துப் பின்வருமாறு ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

கருவூர் வஞ்சி காகந்தி புகார்
காவிரிப் பூம்பட் டினமு மாகும்.

இதன்பின் ஏழு நூற்பாக்கள் அச்சுப்பிரதிகளில் உள்ளன. ஆயினும், அவை பழமையான பிரதிகளில் இல்லை.

அவந்தியின் பெயர்

உஞ்சை யவந்தி.

காளி யவந்தி என்றும் ஒரு பிரதிப் பாடம்,

காசியின் பெயர்

காசி வாரணசி.

2. வாரணாசி.

காஞ்சியின் பெயர்

கச்சி காஞ்சி.

மிதிலையின் பெயர்

விதேகை யென்பது மிதிலை யாகும்.

3 மிதுலை

அயோத்தியின் பெயர்

வினிதை சாகேதங் கோசலை யயோத்தி.

புரியென்னும் பெயர்

புரியென் கிளவி புரமென் றாகும்.

பாடியென்னும் பெயர்

பாடி யென்பது சேரியாகும்.

இதன்பின் முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த நான்கு நூற்பாக்கள் வருமாறு :

கடாரத்தின் பெயர்

56. * காழகங் கடார மாகக் கருதுவர்.

சிங்களத்தின் பெயர்

57. * சிங்கள மீழ மாகச் செப்புவர்.

ஈழஞ் சிங்களம்.

நெல்லு புல்லு நிறைந்த மலையூரின் பெயர் :

58. * நெல்லும் புல்லு நிறைந்த மத்தகம்
புல்லு மலையூர் சம்வாக மாகும்.

அரித்துவாரத்தின் பெயர்

59. * அரித்து வர்ரம் மாயா புரியாம். (101)

## 946. அங்காடியின் பெயர்

கூலம், அங்காடி எனக் கூறுவர்.

**அங்காடியின் பெயர் (1)**

1. கூலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 யாகக், கடையாக (102)

## 947. ஆவணத்தின் பெயர்

ஆவணம், நியமம் ஆகலும் உரித்தே.

**ஆவணத்தின் பெயர் (1)**

1. நியமம். (103)

## 948. தெருவின் பெயர்

ஆவணம், வீதி, ஞெள்ளல், மறுகு,
கோசு, நியமம், மார்க்கம், தெருவே.



**தெருவின் பெயர் (7)**

1. ஆவணம், 2. வீதி, 3. ஞெள்ளல், [4. மறுகு, 5. கோசு, 6. நியமம், 7. மார்க்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:1 கோசப்.

இதனோடு. 'சிறகென ஒருவழிச் செப்பவும் படுமே' என ஒரு தனி நூற்பா 'மற்றும் தெருவின் பெயர்' என்னும் தலைப்பில் முதல் அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. இந்நூற்பாவைப் பிற்பதிப்புக்கள் தெருவின் பெயர் நூற்பாவோடு ஒரு சேர அமைத்துத் தந்துள்ளன.

இதன்பின் முதற்பதிப்பு அச்சுப்பிரதியில் காணப்படும் ஆறு நூற்பாக்கள் பெரும்பான்மையான பிரதிகளிலும் இல்லை. எனவே, இவை நூற்பகுதியுடன் சேர்த்துத் தரப்படவில்லை பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்களும் இவற்றை அச்சுப்பிரதியில் மட்டும் உள்ளவை என்று குறிப்பிட்டுள்ளார்.

நெடுந்தெருவின் பெயர் :

மன்ற மார்க்க நியமநெடுந் தெருவே,

குறுந்தெருவின் பெயர் :

குறுந்தெரு மறுகே.

குதிரை வையாளி வீதியின் பெயர் :

செண்டு வெளிவை யாளி வீதி.

வேந்தர் வீதியின் பெயர் :

பூரியம் வேந்தர் வீதி யாகும்.

முடுக்குத் தெருவின் பெயர் :

கோண முடுக்குத் தெருவா கும்மே.

முச்சந்தியின் பெயர் :

அந்திமுச் சந்தி. (104)

## 949. சந்தியின் பெயர்

அந்தி, கவலை, வழியே, சந்தி.

**சந்தியின் பெயர் (3)**

1. அந்தி, 2. கவலை, 3 வழி

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 வரியே (105)

## 950. நாற்சந்தியின் பெயர்

(முந்தையோர்) சதுக்கம், நாற்சந்தி என்ப.

**நாற்சந்தியின் பெயர் (1)**

1. சதுக்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 யென்பர், யாகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பு அச்சுப்பிரதியில் காணப்படும் நான்கு நூற்பாக்கள் பெரும்பான்மைப் பிரதிகளிலும் இடம் பெறவில்லை. எனவே, இவை நூற்பகுதியுடன் சேர்க்கப்பட வில்லை.

சிரேணியின் பெயர்

சேடியும் வாடையுஞ் சிரேணி யாகும்.

மற்றுஞ் சிரேணியின் பெயர்

ஆவிட மெனவு மறையப் படுமே.

அக்கசாலையர் வீதியின் பெயர் :

ஆவேசன மக்க சாலையர் வீதி.

வேடர் வீதியின் பெயர்

பக்கணம் வேடர் வீதியாகும்.

இவற்றை அடுத்து முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புதுச் சூத்திரம் :

சந்தியின் பெயர்

60. * சந்து சதுக்கம். (106)

## 951. கோயிலின் பெயர்

சினகரம், சேதியம், தேவ ராலயம்,
நிலையம், பாழி, பள்ளி, நிகேதனம்,
மந்திரம், ஆலையம், தேவகுலம், கோட்டம்,
நகர், தனி, வானவ ருறையுள், கோயில்.

**கோயிலின் பெயர் (14)**

1. சினகரம், 2. சேதியம், 3. தேவராலயம், 4. நிலையம், 5. பாழி, 6. பள்ளி, 7. நிகேதனம், 8. மந்திரம், 9. ஆலையம், 10. தேவகுலம், 11. கோட்டம், 12. நகர், 13. தனி, 14. வானவருறையுள்.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆலயத்தின் பெயர்.

1:2 சேதியம், சேதிகம், 3-4 தேவ ராலையம்

2:1 நிலயம்

3:2 ஆலயம் 3-4 குலங்கோட்ட நகரென

4:1 நகரே, நகரென, 2-4 வானவ ருறையுளின் பெயரே

4 வானவ ருறையுளின் வண்பெய ராகும்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் ஐந்து நூற்பாக்கள் பழமையான பிரதிகளில் இல்லை.

அறச்சாலையின் பெயர் :

சத்திரஞ் சாலை யறச்சாலை யாகும்.

ஓதும் பள்ளியின்பெயர் :

அறப்புற மோதும் பள்ளி யாகும்.

ஓம மண்டபத்தின் பெயர் :

சமித்த மோம மண்டபஞ் சாரும்.

மன்னரில்லின் பெயர் :

சாலை மாளிகை பவனங் கோயில்
குலமு மன்னரில் லாகக் கூறுவர்.

மன்னன்றேவி யிருக்கையின் பெயர் :

சுந்த வாரமு முவளகமு மந்தப்
புரமுந் தேவியர் மனையாகு மென்ப. (107)

## 952. வீட்டின் பெயர்

மாடம், மனை, உறையுள், புக்கில், பதி, வசதி,
இடமே, பாத்தில், அகம், வயின், இல்லம்,
இடவகை, சேர்வு, வீடு என்று இசைப்பர்.

**வீட்டின் பெயர் (13)**

1. மாடம், 2. மனை, 3. உறையுள், 4. புக்கில், 5. பதி, 6. வசதி, 7. இடம், 8. பாத்தில், 9. அகம், 10. வயின், 11. இல்லம், 12. இடவகை, 13. சேர்வு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 பாத்தி

3:2 சேர்விடம், 3. வீடென (108)

### 953. சிற்றிலின் பெயர்

கூரையும், குரம்பையும் சிற்றில் ஆகும்.

**சிற்றிலின் பெயர் (2)**

1. கூரை, 2. குரம்பை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கூரை குரம்பை குடில்சிற்றி லாகும்-அச்சுப்பிரதி. (109)

### 954. பண்டசாலையின் பெயர்

(புனை)கல னிருக்கை, பண்ட சாலை.

**பண்டசாலையின் பெயர் (1)**

1. கலனிருக்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (110)

### 955. இறப்பின் பெயர்

இறை, இறப்பு.

**இறப்பின் பெயர் (1)**

1. இறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இறையின் பெயர், வீட்டிறப்பின் பெயர்.

வளவி யிறையே வீட்டிறப் பாகும்-அச்சுப்பிரதி. (111)

### 956. தாழ்வாரத்தின் பெயர்

சோபானம், தாழ்வாரம் ஆகும் என்ப.

**தாழ்வாரத்தின் பெயர் (1)**

1. சோபானம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சோபா னந்தாழ் வார மாகும்-அச்சுப்பிரதி.

இறப்புக்குந் தாழ்வாரத்துக்கும் பெயர் என்னுந் தலைப்பில், 'இறையிறப்புச் சோபானந் தாழ்வாரமாகும்' எனவும் 955, 956-ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணையவும் சில பிரதிகள் தந்துள்ளன. (112)



### 957. முகட்டின் பெயர்

விடங்கம், முகடே.

**முகட்டின் பெயர் (1)**

1. விடங்கம். (113)

### 958. வேய்தலத்தின் பெயர்

வேயுள், வேய்தலம்.

**வேய்தலத்தின் பெயர் (1)**

1. வேயுள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேய்தலின் பெயர், வேயுளின் பெயர்.

2. வேய்தல்.

முகட்டுக்கும் வேய்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 'விடங்க முகடே வேயுள் வேய்தல்' என 957, 958 ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணையவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. (114)

### 959. சாலகத்தின் பெயர்

சாலகம், சாளரம், நாழை, சாலேகம்,
வாதா யனம், என வைக்கப் படுமே.

**சாலகத்தின் பெயர் (4)**

1. சாளரம், 2. நாழை, 3. சாலேகம், 4. வாதாயனம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சாளரவாசலின் பெயர், பல்கணியின் பெயர்.

2; 3-4 வகுக்கப் படுமே

2 வாதா யனம்பல் கணியெனப் படுமே-அச்சுப்பிரதி.

பலகணி என்பது பிற்பதிப்புக்கள். (115)

### 960. மடைப்பள்ளியின் பெயர்

அட்டில், அடுக்களை, மடைப்பள்ளி ஆகும்.

**மடைப்பள்ளியின் பெயர் (2)**

1. அட்டில், 2. அடுக்களை. 3. மடைப்பள்ளி. (116)

### 961. கல்லூரியின் பெயர்

கல்வி யூரி, கல்லூரி ஆகும்.

**கல்லூரியின் பெயர் (1)**

1. கல்வியூரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆயுதம் பயிலிடப் பெயர், கல்வி பயிலிடத்தின் பெயர்.

1. கல்வி (117)

### 962. சுவர்த்தலத்தின் பெயர்

பித்திகை, சுவர்த்தலம்.

**சுவர்த்தலத்தின் பெயர் (1)**

1, பித்திகை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சுவரின் பெயர். (118)

### 963. பீடத்தின் பெயர்

பீடிகை, பீடம்.

**பீடத்தின் பெயர் (1)**

1. பீடிகை.

பாடவேறுபாடு—விளக்கம்

சுவர்த்தலத்துக்கும் பீடத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 962. 963-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதன்பின் அச்சுப்பிரதியில்,

சலதாரையின் பெயர் :

'அங்கணந் தூம்புவாய் சலதாரை யாகும்'

என ஒரு நூற்பா காணப்படுகிறது. இது பழமையான பிரதி களில் இல்லை. (119)



### 964. முற்றத்தின் பெயர்

முன்றில், அங்கணம், முற்றம் ஆகும்.

**முற்றத்தின் பெயர் (2)**

1. முன்றில், 2. அங்கணம், (120)

### 965. நிலாமுற்றத்தின் பெயர்

அரமியம், நிலாமுற்றம் ஆகும் என்ப.

**நிலாமுற்றத்தின் பெயர் (1)**

அரமியம். (121)

### 966. திண்ணையின் பெயர்

திட்டை, மண்ணீடு, தெற்றி, வேதிகை,
திண்ணை ஆகும் என்மனார் புலவர்.

**திண்ணையின் பெயர் (4)**

1. திட்டை, 2. மண்ணீடு, 3. தெற்றி, 4. வேதிகை.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாவை ஒரு பிரதி இருவேறு தலைப்பில் பின்வருமாறு கொண்டுள்ளது:

மண்ணீட்டின் பெயர் :

திட்டை மண்ணீடு.

திண்ணையின் பெயர் :

தெற்றி வேதிகை திண்ணை யாகும்.

இதன்பின் 'கற்படுத்த பூமியின் பெயர்' என்னும் தலைப்பில், 'கற்படுத்த பூமி குட்டிய மாகும்' என ஒரு நூற்பா அச்சுப் பிரதியில் உள்ளது. இது பழமையான பிரதிகளில் இல்லை. (122)

### 967. சித்திரகூடத்தின் பெயர்

தெற்றி யம்பலம், சித்திர கூடம்.

**சித்திரகூடத்தின் பெயர் (1)**

1. தெற்றியம்பலம். (123)

### 968. அம்பலத்தின் பெயர்

பொதியிலும், மன்றமும், பொதுவும், அம்பலம்.

**அம்பலத்தின் பெயர் (3)**

1. பொதியில், 2. மன்றம், 3. பொது.

பாடவேறுபாடு—விளக்கம்

1. பொதியமும். (124)

### 969. கழகம் என்னும் பெயர்

செல்லல் தீர்க்கும் பல்புகழ்ச் சேந்தனில்
வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்
மல்லும் சூதும் படையும் மற்றும்
கல்விபயில் களமும் கழகம் ஆகும்.

**கழகம் என்னும் பெயர் (6)**

வல்லுநரும் நாவலரும் சேருமிடத்திற்கும் மல்லும் சூதும் படையும் கல்வியும் பயிலிடத்திற்கும் உரியது.

1. வல்லுநர் வாய்ந்த இடம், 2. நாவலர் வாய்ந்த இடம், 3. மல்பயில்களம், 4. சூதுபயில்களம், 5. படைபயில் களம், 6. கல்விபயில்களம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கல்வி பயிலிடப் பெயர்.

1:3 அம்பர்ச்

2 வல்லுநர் நாவலர் கைவலர் வாய்ந்த
கல்வி பயில்களம்கழக மாகும். (125)

### 970. அரசிருக்கையின் பெயர்

அரசிருக்கைப்பெயர், அத்தாணி ஆகும்.

**அரசிருக்கையின் பெயர் (1)**

1. அத்தாணி. (126)

### 971. அரங்கம் என்னும் பெயர்

போரினிடமும், வட்டாடிடமும்,
ஆடலிடமும், அவையும், அரங்கம்.



**அரங்கம் என்னும் பெயர் (4)**

1. போரினிடம், 2. வட்டாடிடம், 3. ஆடலிடம், 4. அவை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அரங்கம் என்னும் சொற்பொருட்பெயர். (127)

### 972. ஒருசிறை விட்டின் பெயர்

ஒருசிறை துச்சில்.

**ஒருசிறை விட்டின் பெயர் (1)**

1. துச்சில்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஒதுக்குக் குடியிருக்கைப் பெயர், ஒருசிறை,
அல்லது ஒதுக்கிடத்தின் பெயர். (128)

### 973. வேறிடத்தின் பெயர்

கொட்டில், வேறிடம்,

**வேறிடத்தின் பெயர் (1)**

கொட்டில்.

பாடவேறுபாடு—விளக்கம்

ஒருசிறை விட்டுக்கும் வேறிடத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 972, 973-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள், கொண்டுள்ளன.

அச்சுப் பிரதியில் ஏகாந்தத்தின் பெயர் என்னும் தலைப்பில் இந்நூற்பா பின்வருமாறு வேறுபட்டுக் காணப்படுகிறது :

ஒருவந்த மேகாந்தங் கொட்டில் வேறிடம்.

இந்நூற்பாவையடுத்துக் கற்புடையின் பெயர் என்னும் தலைப்பில்,

'சுருங்கை கற்படை யாகு மென்ப' என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இது பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. (129)

### 974. உறைவிடத்தின் பெயர்

ஆகரம், பிறப்பிடம், உறைவிடம் ஆகும்.

**உறைவிடத்தின் பெயர் (2)**

1. ஆகரம், 2. பிறப்பிடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆகரம் என்னும் சொற்பொருட் பெயர்.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் 'அடுப்பின் பெயர் பற்றிய நூற்பா பழம்பிரதிகளில் இல்லை.

அடுப்பின் பெயர் :

குமுதஞ் சுல்லி காமர மடுப்பு

மூத்தான மெனவு மொழியப் படுமே.

இரண்டாம் அடி, 'உத்தான மெனவு மோதப் படுமே' என்றும் பாடவேறு பாட்டுடன் காணப்படுகிறது. (130)

## 975. கூட்டின் பெயர்

குடம்பை, பஞ்சரம், கட்சி, கூடு ஆகும்.

**கூட்டின் பெயர் (3)**

1. குடம்பை, 2. பஞ்சரம், 3. கட்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து அச்சுப் பிரதியில் பின்வரும் நூற்பா காணப் படுகிறது:

பண்ணுங் கூட்டின் பெயர்

குலாயனம் பஞ்சரம் பண்ணுங் கூடே.

இந்நூற்பாப் பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. (131)

## 976. குதிரைப்பந்தியின் பெயர்

மந்திரம், பனை, பந்தி, குதிரைப்பந்தி.

**குதிரைப்பந்தியின் பெயர் (3)**

1. மந்திரம் 2. பனை, 3. பந்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 சாலை (132)

## 977. யானை சேர்விடத்தின் பெயர்

(நீடிய) விரவும், சேவகமும், தண்டமும்,
கூடமும், யானை சேர்விடம் ஆகும்.



**யானை சேர்விடத்தின் பெயர் (4)**

1. விரவு, 2. சேவகம், 3. தண்டம், 4. கூடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆனைக்கூடத்தின் பெயர்.

1:1-2 ஆலயமும் வாரியும் 4. தடமும்

2:2-4 ஒளியும் யானை சேர்விடம், 3-4 ஆனை சேர்விடம் சேவகங் கூடகம் யானை சேர்விடம்-என்றும் ஒரு பிரதியில் உள்ளது. (133)

## 978. யானை சென்ற வழியின் பெயர்

தண்டம், யானை சென்ற வழியே.

**யானை சென்ற வழியின் பெயர் (1)**

1. தண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : யானை செல் வழியின் பெயர்.

3-4 செல்வழி யென்ப.

பள்ளிசயனம் தண்டம் யானை சென்ற வழியே.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில்,

யானை துயிலிடத்தின் பெயர் என்னும் தலைப்பில்,

'சேவகம் யானை துயிலிடமாகும்'

என ஒரு நூற்பா உள்ளது. இது பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. (134)

## 979. துயிலிடத்தின் பெயர்

கட்சி, அமளி, சேக்கை, உறையுள்,
சட்டகம், சேர்விடம், பள்ளி, சயனம்,
பட்டம், பாழி, பாயல், அரி, துயிலிடம்,
ஒட்டிய உயர்திணைக் கிடப்பிடம் ஆகும்.

**துயிலிடத்தின் பெயர் (13)**

1. கட்சி, 2. அமளி, 3. சேக்கை, 4. உறையுள், 5. சட்டகம், 6. சேர்விடம், 7. பள்ளி, 8. சயனம், 9. பட்டம், 10. பாழி, 11. பாயல், 12. அரி, 13. துயிலிடம்.

பாட்வேறுபாடு—விளக்கம்

தலைப்பு : படுக்கை வீட்டின் பெயர், மக்கட்கிடப்பிடத் தின் பெயர்.

3:3-4 பாயல் துயிலிடம்.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் ஒரு நூற்பா வருமாறு:

விலங்கு துயிலிடத்தின் பெயர்

பட்டம் போத்து பண்ணை சேக்கை

விலங்கு துயிலு மிடமா கும்மே.

இது பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. (135)

## 980. வேள்விக்குண்டத்தின் பெயர்

வேதியும் நித்தியமும் வேள்விக் குண்டம்.

**வேள்விக்குண்டத்தின் பெயர் (2)**

1. வேதி, 2. நித்தியம்

பாடவேறுபாடு—விளக்கம்

2 நித்தமும்

இந்நூற்பாவைத் தொடர்ந்து அச்சுப்பிரதியில் இடம் பெற் றுள்ள ஒரு நூற்பா வருமாறு:

முனிவர் வாசத்தின் பெயர்:

தாபதம் பாழி கரண்டை பள்ளி

முனிவர் வாசமென மொழியப் படுமே.

இது பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. (136)

## 981. மட்கலஞ்சுடுமிடத்தின் பெயர்

சூளை என்பது மட்கலம் சுடும் இடம்.

**மட்கலஞ்சுடுமிடத்தின் பெயர் (1)**

1. சூளை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சூளையின் பெயர், சூளை என்னும் பெயர்.

1.2 சுள்ளையென்பது, சுள்ளையுஞ் சூளையும் (137)



## 982. சுடுகாட்டின் பெயர்

ஈமம், மயானம், சுடலை, சுடுநிலம்,
புறங்காடு, முதுகாடு, சுடுகாடு, ஆகும்.
பிதிர்வனம், இறந்தோர் வனம், பிணக்காடே.

**சுடுகாட்டின் பெயர் (9)**

1. ஈமம், 2. மயானம், 3. சுடலை, 4. சுடுநிலம், 5. புறங்காடு, 6. முதுகாடு, 7. பிதிர்வனம், 8. இறந்தோர் வனம், 9. பிணக்காடு.

பாடவேறுபாடு—விளக்கம்

2 புறங்கா டெரிவனஞ் சுடுகா டுடுகாடு

3 ஆம் அடி தனிநூற்பாவாகவும் சில பிரதிகளில் காணப்படு படுகிறது.

சுடுகா டீம மயானஞ் சுடலை

சுடுநிலம் புறங்கா டுடுகாடு முதுகாடு

வனமெரி வனம் பிதிர் வனம்பிணக் காடே

என்பது அச்சுப்பிரதி.

'சுடலை சுடுவன மீம மயானம்
புறங்கா டெரிவனஞ் சுடுகாடு பிதிர்வனம்
இறந்தோர் சேர்வனம் பிணக்கா டென்ப'

என்று பாட வேறுபாடு காணப்படுகிறது. (138)

## 983. பொருகளத்தின் பெயர்

களரி, பறந்தலை, செம்புலம், படுகளம்,
பொருளகம், களம், எனப் புகன்றனர் புலவர்.

**பொருகளத்தின் பெயர் (5)**

1. களரி, 2. பறந்தலை. 3. செம்புலம், 4. படுகளம். 5. களம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பொருகள மென்னப் புகலுவர் புலவர். (139)

## 984. வழுக்கு நிலத்தின் பெயர்

அருப்பம், ஆரிடம், அஞர், இழுக்கு, வழுக்கு நிலம்.

**வழுக்கு நிலத்தின் பெயர் (4)**

1. அருப்பம், 2. ஆரிடம், 3. அஞர், 4. இழுக்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அழுக்கு நிலத்தின் பெயர்

3-4 அழுவம் வழுக்குநிலம், இழுச்சல் வழுக்குநிலம்,

இழுக்கு வழுக்குநிலம். (140)

### 985. தொழுவின் பெயர்

தொழுவே, மாவேலி, தொறு ஆனிலையே.

**தொழுவின் பெயர் (3)**

1. மாவேலி, 2. தொறு, 3. ஆனிலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பசுநிலையின் பெயர்

தொழுவ மாவேலி தோழ மானிலையே-அச்சுப்பிரதி.

'தோழும் வேலி தொழுவ மானிலையே' என்றும் ஒரு பிரதிப் பாடம். (141)

### 986. மதிலின் பெயர்

இஞ்சி, நொச்சி, எயில், சுற்று, புரிசை,
பந்தம், வரைப்பு, காப்பு, அரண், காவல்,
வல்லார், ஓதை, பாகாரம், வேலி,
(சீர்சால்) வேணகை, மதில்எனச் செப்புவர்,
(வன்) சிறை, உவளகம் ஆகலும் உரித்தே.

**மதிலின் பெயர் (17)**

1. இஞ்சி, 2. நொச்சி, 3. எயில், 4. சுற்று, 5. புரிசை, 6. பந்தம், 7. வரைப்பு, 8. காப்பு, 9. அரண், 10. காவல், 11. வல்லார், 12. ஓதை, 13. பாகாரம், 14. வேலி, 15. வேணகை. 16. சிறை, 17. உவளகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோட்டை மதிலின் பெயர்.

3 ஆர லோதை பிராகாரம் வேலி.

4:3 மதிளெனச்

5:1 வண் சிறை

இதன் பின் அச்சுப் பிரதியில் மதிலுளுயர் மேடையின் பெயர் என்னும் தலைப்பில் ஒரு நூற்பா உள்ளது.



பரிக மகப்பா பதண மூன்று
முரிய மதிலு ளுயர்மே டைக்கே.

இந்நூற்பா பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. (142)

### 987. மதிற்சுற்றின் பெயர்

கோட்டையும், தகைப்பும், வாரியும், சுற்று ஆம்.

**மதிற்சுற்றின் பெயர் (3)**

1. கோட்டை, 2. தகைப்பு, 3. வாரி.

பாடவேறுபாடு—விளக்கம்

1 தொடையுந் 4 சுற்றே. (143)

### 988. மதிலுறுப்பின் பெயர்

பதப்பாடு, எந்திரம், கோசம், தோணி,
விதப்பு, ஞாயில், நாஞ்சில், மதில் உறுப்பே.

**மதிலுறுப்பின் பெயர் (7)**

1. பதப்பாடு, 2. எந்திரம், 3. கோசம், 4. தோணி, 5. விதப்பு, 6. ஞாயில், 7. நாஞ்சில். (144)

### 989. அகழின் பெயர்

அகழி, கிடங்கு, அகப்பா, பரிகம், அகழே.

**அகழின் பெயர் (4)**

1. அகழி, 2. கிடங்கு, 3. அகப்பா, 4. பரிகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

அகழின் பெயர் மேடையின் பெயர் :

அகழி கிடங்கு, அகப்பா பரிகம்,

அகழிகிடங் கோடை பரிகையகழ் கேணி-பிற்பதிப்புக்கள்.

இதன்பின், குதிரின் பெயர் என்னும் தலைப்பில்

'புகலுகுதி ரரகும்.'

என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இது பெரும் பான்மைப் பிரதிகளிலும் இல்லை. (145)

### 990. வாயிலின் பெயர்

தோட்டி, துவாரம், வாரி, வாயில்.

**வாயிலின் பெயர் (3)**

1. தோட்டி, 2. துவாரம், 3. வாரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வாய்தலின் பெயர்.

3-4 வாரி வாய்தல்,

வாரி கடை வாயில்-அச்சுப்பிரதி.

இதனை அடுத்து கோபுரம் அல்லது கோபுர நிலையின் பெயர் என்னும் தலைப்பில் 'சிகரி கோபுரம்' என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. இது பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. (146)

### 991. பெருவாயிலின் பெயர்

கோபுரம் என்பது பெருவாயில் பெயரே.

**பெருவாயிலின் பெயர் (1)**

1. கோபுரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பெருவாயிற் பெயர்.

3-4 பெருவாயி லாகும். (147)

### 992. கதவினுள் வாசலின்பெயர்

புதவு, வாயிற் புகுபெரும் புழையே.

**கதவினுள் வாசலின் பெயர் (1)**

1. புதவு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோபுரவாயிலிற் புகு புழையின் பெயர், திட்டி வாயிலின் பெயர்.

1 புதவம், 4. பூழை, பாழை.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் இரு நூற்பாக்கள் பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. அவை வருமாறு:



கோபுரவாயிற்றிண்ணையின் பெயர்

அளிந்த மல்லழிச் சார்திண்ணை யாகும்.

கோபுரவாயிற் படிச்சுருளின் பெயர்

அத்தினகம் வாயிற் படிச்சுரு ளாகும். (148)

### 993. வயலின் பெயர்

விளையுளும், வயலும், செய்யும் (விளை) கழனி,
தடியும் பாத்தியும் செறுவும் வரையார்.

**வயலின் பெயர் (6)**

1. விளையுள், 2. செய், 3. கழனி, 4. தடி, 5. பாத்தி, 6. செறு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புரவின் பெயர்.

2ஆம் அடியை வயற்றடியின் பெயர் எனத் தனி நூற்பா வாகவும் ஒரு பிரதி தருகிறது.

1:2 பண்ணையும்

1:3-4 செய்யும் விளைகழனியும், செய்யும் விளை வயல்.

2:3-4 செறுவும் புரவு, செறுவு மவையே, செறுவும் வயலே.

இதனை அடுத்துச் 'சிறுசெய்யின் பெயர்' என்னும் தலைப்பில் வரும் நூற்பாவும் பழம்பிரதிகளில் இல்லை.

குண்டில் சிறுசெய் யாகக் கூறுவர்.

தலைப்பு : சிறுவயலின் பெயர்

குண்டிலும் பாத்தியும் சிறுவய லாகும்.

குண்டில் பாதிதி சிறுசெய் யாகும்-அச்சுப்பிரதி. (149)

### 994. புனத்தின் பெயர்

குறிஞ்சிநிலச் சார்வும், கொல்லையும், புனமே.

**புனத்தின் பெயர் (2)**

1. குறிஞ்சி நிலச்சார்வு, 2. கொல்லை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குறிஞ்சியில் விளைநிலத்தின் பெயர்.

2, சார்பும், (150)

## 995. தினைப்புனத்தின் பெயர்

ஏனலும் வளாகமும் தினைப்புனம் என்ப.

**தினைப்புனத்தின் பெயர் (2)**

1. ஏனல், 2. வளாகம்.

(151)

## 996. பழங்கொல்லையின் பெயர்

முதைப்புனம், பழங்கொல்லை.

**பழங்கொல்லையின் பெயர் (1)**

1. முதைப்புனம்.

(152)

## 997. புதுக்கொல்லையின் பெயர்

இதைப்புனம், புதுக்கொல்லை.

**புதுக்கொல்லையின் பெயர் (1)**

1. இதைப்புனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

பழங்கொல்லைக்கும் புதுக்கொல்லைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 996, 997-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

(153)

## 998. தோட்டத்தின் பெயர்

தோட்டம், துடவை, படப்பை, இம் மூன்றும்
தோட்டப் பெயர் எனச் சொல்லினர் புலவர்.

**தோட்டத்தின் பெயர் (3)**

1. தோட்டம், 2. துடவை, 3. படப்பை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 தொடவை

2:3 சொல்லுவர்.

(154)

## 999. உழவின் பெயர்

தொடவை, தொய்யில் உழவின் பெயரே.



**உழவின் பெயர் (2)**

1. தொடவை, 2. தொய்யில்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 துடவை தொய்யல்.

(155)

## 1000. உழுதொழில் வளைப்பின் பெயர்

தொடுப்பே, உழுவோர் தொழில் வளைப்பு ஆகும்.

**உழுதொழில் வளைப்பின் பெயர் (1)**

1. தொடுப்பு.

பாட வேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஏர்த்தொழிலின் பெயர், விளாக்கோலிடத்தின் பெயர்.

(156)

## 1001. முதுவரம்பின் பெயர்

மரிசி, முதுவரம்பு.

**முதுவரம்பின் பெயர் (1)**

1. மரிசி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வரம்பின் பெயர்.

1. மரசி, மாஞ்சி, 2. புதுவரம்பு.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் புற்றின் பெயர் பற்றிய நூற்பா 1004-ஆம் நூற்பாவாகவுள்ளமை காண்க.

புற்றின் பெயர்

வன்மீகம் புற்று.

(157)

## 1002. வரம்பருகின் பெயர்

கங்கு, வரம்பருகு.

**வரம்பருகின் பெயர் (1)**

1. கங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

2 வரம்பருகே

முதுவரம்புக்கும் வரம்பருகுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1001, 1002-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (158)

### 1003. பள்ளத்தின் பெயர்

உவளகம், பயம்பே, அவலும், கீழும்,
இழிவும், கிழக்கும், படுகரும், பள்ளம்.

**பள்ளத்தின் பெயர் (7)**

1. உவளகம், 2. பயம்பு, 3. அவல், 4. கீழ், 5. இழிவு, 6. கிழக்கு, 7. படுகர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 பயம்பும் 3-4 அவல்குழி தாழ்வே.

2 இழிவு கிழக்குப் படுகர் பள்ளம்-அச்சுப்பிரதி. (159)

### 1004. புற்றின் பெயர்

வன்மீகம், புற்று.

**புற்றின் பெயர் (1)**

1. வன்மீகம். (160)

### 1005. புற்றாஞ் சோற்றின் பெயர்

குரும்பி, புற்றாஞ் சோறே.

**புற்றாஞ் சோற்றின் பெயர் (1)**

1. குரும்பி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 புற்றாஞ்சோறு, பு சாறு.

புற்றுக்கும் புற்றாஞ்சோற்றுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1004, 1005-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (161)



### 1006. முதுநிலத்தின் பெயர்

களரி, கரம்பை, பெரும்பாழ், முதுநிலம்.

**முதுநிலத்தின் பெயர் (3)**

1. களரி, 2. கரம்பை, 3. பெரும்பாழ்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பாழ்நிலத்தின் பெயர்,

2 கரம்பே, கரம்பு. (162)

### 1007. வழியின் பெயர்

சரி, நெறி, ஒழுக்கம், தாரை, ஆறு,
வதி, அதர், மார்க்கம், இயவை, நடவை,
பதவை, செப்பம், அயனம், இடமொடு,
வாரி, வட்டை, வரி, இயவுள், வகுந்து,
செலவு, சிறுபதம், வழிக்கிளவி ஆகும்.

**வழியின் பெயர் (21)**

1. சரி, 2. நெறி, 3. ஒழுக்கம், 4. தாரை, 5. ஆறு, 6. வதி, 7. அதர், 8. மார்க்கம், 9. இயவை, 10. நடவை, 11. பதவை, 12. செப்பம், 13. அயனம், 14. இடம், 15. வாரி, 16. வட்டை, 17. வரி, 18. இயவுள், 19. வகுந்து, 20. செலவு, 21, சிறுபதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 அதரம், 3 இயவு

3:4 இடவை

4:3 வரியியல்பு, வரிவயவை, வரிவயவு

5:1 செல்வு (163)

### 1008. அருநெறியின் பெயர்

அத்தம், கடறு, சுரம், தூம்பு, அருநெறி.

**அருநெறியின் பெயர் (4)**

1. அத்தம், 2. கடறு, 3. சுரம், 4. தூம்பு,

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 அத்தங் கடங்கடறு. அச்சுப்பிரதி.

3-4 தூம்புசுர மருநெறி. (164)

## 1009. கவர்த்த நெறியின் பெயர்

கவலை, கவர்த்த நெறி எனக் கருதுவர்.

**கவர்த்த நெறியின் பெயர் (1)**

1. கவலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கவர்த்த வழியின் பெயர்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணும் ஒரு நூற்பா பெரும்பான்மையான ஏடுகளிலும் இல்லை.

சிறுவழியின் பெயர்.

விடங்கர் சிறுவழி யாகு மென்ப,

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் இயற்றிச் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு:

பெருவழியின் பெயர்:

61. * பாதை பெருவழி. (165)

## 1010. இழிந்தேறப்படு வழியின் பெயர்

படுகர், இழிந்து ஏறப் படும்நெறி ஆகும்.

**இழிந்தேறப்படும் வழியின் பெயர் (1)**

1. படுகர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இறங்கியேறும் வழியின் பெயர்.

2 விழுந்தேறப்

2-4 மடுவிழிந் தேறப் படுநெறி

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் இரு நூற்பாக்கள் பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை.

கற்படியின் பெயர்:

ஆரோ கணஞ்சோ பானங் கற்படி.

நீள்வழியின் பெயர்

அளக்கர், நீள்வழியே.. (166)



## 1011. இடத்தின் பெயர்

வாய், புலம், பாங்கர், வயின், களம், வைப்பு,
தேயம், வழி, உழி, திணையே; மருங்கு,
பால், நிலம், தலமே, வளாகம், பட்டி,
சூழல், தானம்; இடப்பெயர்த் தொடர்பே.

**இடத்தின் பெயர் (18)**

1. வாய், 2. புலம், 3. பாங்கர், 4. வயின், 5. களம், 6. வைப்பு, 7. தேயம், 8. வழி, 9. உழி. 10. திணை, 11. மருங்கு 12. பால், 13. நிலம், 14. தலம், 15. வளாகம், 16. பட்டி, 17. சூழல், 18. தானம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இடத்தின் பொதுப் பெயர்

1:3 வயினகம்

2:2 வழியுளி

3:2-3 தளமே வாழகம்

4:3-4 இடப் பொதுப் பெயரே.

அச்சுப்பிரதியில் 'மற்றுமிடப் பொதுப்பெயர்' என்னும் தலைப்பில் தொல்காப்பிய நூற்பா ஒன்று இதனை அடுத்து இடம் பெற்றிருக்கிறது.

கண்கால் புறமக முள்ளுழை கீழ்மேல்
பின்சா ரயல்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ
அன்ன பிளவு மதன்பால வென்மனார்.

இந்நூற்பா பழம் பிரதிகளில் இல்லை. (167)

## 1012. பக்கத்தின் பெயர்

மாடு, சிறை, உளி, மருங்கு, ஞாங்கர், முன்,
பால், புடை, பாங்கர், பக்கம் ஆகும்.

**பக்கத்தின் பெயர் (9)**

1. மாடு, 2. சிறை, 3. உளி, 4. மருங்கு, 5. ஞாங்கர், 6. முன், 7. பால், 8. புடை, 9. பாங்கர். (168)

## 1013. நடுவின் பெயர்

நனந்தலை, நரப்பண், மத்திமம், நள்ளு,
(வயங்கு) இடை, ஒத்தல், நாவோடு, அணவு,
(நலம்திகழ்) கூழையும் நடுஎன்று ஆகும்.

**நடுவின் பெயர் (9)**

1. நனந்தலை, 2. நரப்பண், 3. மத்திமம், 4. நள், 5. இடை, 6. ஒத்தல், 7. நா, 8. அணவு, 9. கூழை.

பாடவேறுபாடு—விளக்கம்

3:3-4 நடுவென நவில்வர். (169)

## 1014. உயர்ச்சியின் பெயர்

உம்பர், மீ, புலம், வலமே, ஒக்கம்,
துங்கம், உவணம், பருமம், உந்தி,
மேடு, மோடு, தூக்கு, மேக்கு,
நிவப்பு, இவை உயர்ச்சி ஆக நிகழ்த்துவர்.

**உயர்ச்சியின் பெயர் (14)**

1. உம்பர், 2. மீ, 3. புலம், 4. வலம், 5. ஒக்கம், 6. துங்கம், 7. உவணம், 8. பருமம், 9. உந்தி, 10. மேடு, 11. மோடு, 12. தூக்கு, 13. மேக்கு, 14. நிவப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 மீப்புலம், மீபுரை

2:3-4 பரும முயரம், 4 மூக்கு

4:3-4 ஆகப் பகர்வர்

3-4 மேடு தூக்கு மேக்கு நிவப்பென
வந்த விவையு முயர்ச்சி யாகும்.

1-4 உம்பர் மீமிசை யுகப்புச்ச மோங்கல்
துங்க முவன மேடு மோடு
தூக்கு மேக்குறை யுன்னத மெழுமை
நிவப்பிவை யுயர்ச்சி யாக நிகழ்த்துவர்-பிற்பதிப்புக்கள் (170)

## 1015. முன்னிட மேலிடப் பொதுப்பெயர்

ஞாங்கர், முன்னும் மேலும் ஆகும்.



**முன்னிட மேலிடப் பொதுப்பெயர் (1)**

1. ஞாங்கர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஞாங்கர் என்னும் பெயர், மேலின் பெயர். (171)

## 1016. இவண் என்னும் பெயர்

இம்பர், இவணே.

**இவண் என்னும் பெயர் (1)**

1. இம்பர். (172)

## 1017. உவண் என்னும் பெயர்

உம்பர், உவணே.

**உவண் என்னும் பெயர் (1)**

1. உம்பர்.

பாடவேறுபாடு—விளக்கம்

இவணென்னும் பெயர் உவணென்னும் பெயர் என்னும் தலைப்பில் 1016, 1017-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (173)

## 1018. ஆண்டு என்னும் பெயர்

ஆண்டு, அவ்விடம்.

**ஆண்டு என்னும் பெயர் (1)**

1. அவ்விடம். (174)

## 1019. ஈண்டு என்னும் பெயர்

ஈண்டு, இவ்விடம்.

**ஈண்டு என்னும் பெயர் (1)**

1. இவ்விடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

ஆண்டென்னும் பெயர் ஈண்டென்னும் பெயர் என்னும் தலைப்பில் 1018, 1019-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (175)

### 1020. கூப்பிடுதூரத்தின் பெயர்

எல்லை, குரோசம், கூப்பிடு என்ப.

**கூப்பிடு தூரத்தின் பெயர் (2)**

1. எல்லை, 2. குரோசம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கூப்பிடுதூரப் பெயர், கூப்பீட்டின் பெயர்.

(176)

### 1021. கிரவுஞ்சம் என்னும் பெயர்

கிரவுஞ்சம், கோழிப் பறவைஅளவு ஆகும்.

**கிரவுஞ்சம் என்னும் பெயர் (1)**

1. கோழிப்பறவை அளவு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோழிப் பறவையளவின் பெயர்,

பறவையளவின் பெயர்.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் வரும் நூற்பா வருமாறு :

யோசனை தூரத்தின் பெயர் :

புன கயோ சனையாம்.

இந்நூற்பாப் பழம் பிரதிகளில் இல்லை. (177)

### 1022. காதத்தின் பெயர்

காவதம், காதம் ஆகக் கருதுவர்.

**காதத்தின் பெயர் (1)**

1. காவதம். (178)



### 1023. இடப்பகுதியின் பெயர்

கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல்,
பின், சார், அயல், புடை, தேவகை எனாஅ,
முன், இடை, கடை, தலை, வலம், இடம் எனாஅ,
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

**இடப்பகுதியின் பெயர் (14)**

1. கண், 2. கால், 3. புறம், 4. அகம், 5. உள், 6. உழை, 7. கீழ், 8. மேல், 9. பின், 10. சார், 11. அயல், 12. புடை, 13. தேவகை, 14. முன், 15. இடை, 16. கடை, 17. தலை, 18. வலம், 19. இடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இடப்பொதுப் பெயர்.

2:3 தேம்வகை. (179)

### 1024. திவாகர வரலாறு

ஒருவற்கு ஒருவன் ஆகி உதவினும்,
பரிசில் மாக்கள் பற்பலர் ஆயினும்,
தான்ஒரு வன்னே தரணி மானவன்,
செந்தமிழ்ச் சேந்தன் தெரிந்த திவாகரத்து
ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-4 ஒருவர்க் கொருவ ராக யுதவியும்

2:1-2 பரிசனமாக்கள் 4 ஆகியும்

3:3-4 தரணி திலகம், தரணிதிலக மானவன்

4:3 தெரித்த (180)